
• இந்திரன்

# உடம்பு எனும் மொழி



ஓவியம் : தனபால்

ஓவியம், சிற்பம் ஆகியவற்றில் தமிழர்களுக்கென்று தனியான ஒரு அழகியல் இருக்கிறது. மனித உடம்பு பேசும் மொழியில் சாரமாக எது இருக்கிறதோ அதைக் கைப்பற்ற தமிழ்ச் சிற்பிகள் சதாகாலமும் முயன்று வந்துள்ளனர். இன்றைய நாளில் தற்கால ஓவியர்களும், சிற்பிகளும் முன்னேறிய தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக, உலகின் பல்வேறு திசைகளிலிருந்து கலைவெளிப்பாடு குறித்த பல்வேறு சிந்தனைகளைப் பெறுகிறார்கள். இது அவர்களது கலை வெளிப்பாட்டின் எல்லைகளை விரிவுபடுத்திக் கொண்டே போகிறது. அதே நேரத்தில் மனித உடம்பு பேசும் மொழியைப் பற்றிய தமிழ்த்தனமான ஒரு புரிதல் எனும் அடையாளத்தை அழித்துவிடும் அபாயமும் குறைந்ததாக உள்ளது.


**உடம்பு : மேலைப் பார்வை கீழைப் பார்வை**

மேலை உலகம், கீழை உலகம் எனும் பேசும் முறை இன்று மாறி வடக்கு உலகம், தெற்கு உலகம் எனும் பேசும் முறை வழக்கில் வந்துவிட்ட இந்தக் கால கட்டத்திலும் கூட கலையைப் பொறுத்தமட்டிலும் இவை இரண்டிற்கும் வேறுபாடு இருக்கவே செய்கிறது.

எடுத்துக்காட்டாக மேலை ஓவிய/சிற்ப மரபுகளில் பறக்கும்

உருவங்களைக் காட்ட வேண்டுமானால், மனித வடிவங்களுக்கு இரண்டு சிறகுகளைப் பொருத்திக் காட்டினால்தான் அது பறக்கும் உருவம் என்று தெரியப்படுத்தும் முறை பரவலாக உண்டு. கோதிக் கலை முறையைச் சார்ந்த தேவாலயங்களில் இதனைக் காணலாம்.

ஆனால் அதே நமது தமிழ்நாட்டுச் சுவரோவியங்களை எடுத்துக் கொண்டால் அதில் கின்னரர்களும், கிம்புருடர்களும் இசைக் கருவிகளை இசைத்தபடி வானில் பறந்து செல்வதைச் சித்தரிக்கையில் அவர்களுக்கு இறக்கைகள் எதையும் தமிழர்கள் தரவில்லை. காரணம் உடம்பை படுத்துக் கொண்டு நீந்துவது மாதிரி அமைக்கும் முறையிலும், கால்களை நீச்சலில் உதைப்பது மாதிரி தூக்கிய நிலையில் அமைப்பதிலும் மூலமாகவே தமிழர்கள் அவர்கள் பறக்கின்றனர் என்று காட்டி விடுகின்றனர். இதனையே நான் தமிழ் அழகியல் என்று குறிப்பிடுகிறேன். இத்தகைய போக்கை அஜந்தாவில் 17வது குகையில் தீட்டப்பட்டிருக்கும் பறக்கும் கந்தர்வர்கள் எனும் ஓவியத்திலும் காணலாம். எனவே மனித உடம்பு சொல்லும் மொழியை கீழைத்தேயத்தவர் பார்க்கும் முறைக்கும், மேலைத் தேயத்தவர் பார்க்கும் முறைக்கும் வேறுபாடு உண்டு. இந்த மாறுபாடு அந்தந்த பண்பாட்டின் பின்னணியில் முடிவு செய்யப்படுகிறது.



*ஓவியம்* : இராமன்



*ஓவியம்* : ராசவேலு

**உடம்பின் இயக்கம்**

உடம்பு என்று குறிக்கிறபோது மனித உடம்பை மட்டுமின்றி விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் உடம்புகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டே பேசுகிறோம். புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் இருக்கும் சித்தன்னவாசல் ஓவியங்கள், தஞ்சாவூரில் உள்ள சுவரோவியத்தின் நடனமாடும் நங்கை, காஞ்சிபுரத்திற்கு பக்கத்திலுள்ள திருப்பருத்திக் குன்றம் சமணக்கோயிலின் சுவர் சித்திரங்கள் ஆகிய அனைத்திலும் உடம்பின் இயக்கம் குறித்த சிறப்பான புரிதலைக் காணலாம்.

திருப்பருத்திக் குன்றத்தில் பிறக்கும் தீர்த்தங்கரரை கரத்தில் வாங்கிக் கொள்ளும் அரசி, அப்படியே திரும்பி மறுபுறத்தில் நிற்கும் அரசரிடம் கொடுப்பது போல ஒரு அசைவையே ஓவியத்தில் நிகழ்த்திக் காட்டி உள்ளனர். இது மார்ஷல் டுஷாம்ப் (MARSHAL DUCHAMP) எனும் மேலை ஓவியன் ''படியிறங்கும் நிர்வாண நங்கை'' (DESCENDING NUDE) எனும் ஓவியத்தில் செய்து காட்டிய 'இயங்கும் ஓவியம்'

(ACTION PAINTING) என்பதைக் காட்டிலும் சிறந்த கலை சாதனை என்றே நான் சொல்லுவேன்' இவற்றைச் சரிவர பதிவு செய்து உலகெங்கும் பரவும் வகை செய்கிறபோது உலக அளவில் இவற்றைக் கலை அறிஞர்கள் கண்டு வியக்க இயலும்.

தஞ்சாவூரில் சுவரோவியத்தில் இருக்கும் நடனநங்கை ஓவியத்தைக் காண்கிற போதும் இதை உணரலாம்.


**ஓவிய வெளிப்பாட்டில் 'இறைச்சிப் பொருள்'**

தமிழ் அழகியலின் அடிப்படை சொல்ல வரும் செய்தி, வெளியே விளங்கித் தோன்றாமல் இலைமறை காயாக; கலைப்படைப்பின் உட்கிடையாக வைத்துச் சொல்லுதல் ஆகும். இதில் மிகை நாடகத் தன்மை இன்றி மிக நுட்பமாக செய்தி சொல்லப்பட்டுவிடும்.

இதற்கான மிகச் சரியான உதாரணம் சங்க இலக்கியம் தோறும் பரவி இருக்கும் 'இறைச்சிப் பொருள்' அல்லது 'உள்ளுறை உவமம்'. இன்றைக்கு தமிழில் பிரபலமாகி இருக்கும் கவிதை வகையான, ஜப்பானிய கவிதை மரபான, 'ஹைக்கூ' இதற்கான சரியான உதாரணம். ஓவியத்திலும், சிற்பத்திலும் கூட இத்தகைய நுட்பமான செய்திப் பரிமாறலை, உணர்ச்சி வெளிப்பாட்டைத் தமிழர்கள் மேற்கொண்டனர். இத்தகைய நுட்பமான கலை வெளிப்பாட்டிற்கான ஒரு கருவியாக மனித உடம்பின் மொழியைப் புரிந்து வைத்திருந்தனர் நமது சிற்பிகள்.

**யதார்த்தத்தின் யதார்த்தம்**

நமது சிற்பிகளும், ஓவியர்களும் மனிதர்களைச் சித்தரிக்கும் போது யதார்த்த வெளிப்பாட்டின் திசையைத் தேர்ந்தெடுக்காமல், அந்த யதார்த்தத்தின் சாரமாக எது இருக்கிறதோ அதையே தேர்ந்தெடுத்தனர். மேலைநாடுகளின் சிற்பிகளும், ஓவியர்களும் உடலமைப்பறிவைப் பெறுதல் வேண்டி உடம்பினை அறுத்து அதன் கூறுகளைப் புரிந்து கொள்ள முற்பட்டனர். ஓவியம் தீட்டுவதற்கென ஒரு 'மாதிரி'யை (Model) கண் முன்னால் அமர வைத்து அதனைப் பிரதி எடுத்துத் தங்கள் படைப்புகளைச் செய்கின்றனர். ஆனால் நமது மரபு அத்தகையது அல்ல.



*ஓவியம்* : இந்திரன்

உடலமைப்பறிவியலில் நமது சிற்பிகளும், ஓவியர்களும் காட்டிய அக்கறையைவிட அந்த உடலமைப்பின் ஊடாக ஓடும் ஒரு இசைலயத்தைக் (சுலவாஅ) கைப்பற்றுவதில் அதில் அக்கறை காட்டினர். சிற்பத்துக்குள் கண்ணுக்கு வெளிப்படையாகத் தோன்றாமல், உட்கிடையாகத் தெரியும் இந்த சந்தலயத்தை 'உயிரிசை' என்றே குறிப்பிடலாம். தமிழகத்தின் கலைச் சாதனையாகக் கருதப்படும் செப்புத் திருமேனிகளின் உருவங்களில் மனித உடம்பின் ஊடாக இந்த பிராண சந்தத்தையே வெற்றிகரமாகக் கைப்பற்றி இருக்கிறார்கள்.

ஒரு மனிதனை உருவ மாதிரியாக ஓவியனின் கண் முன்னால் உட்கார வைத்துவிடுகிறபோது இயக்கமற்றுப் போய் அவனது உடம்பு உயிர்த்துடிப்பை இழந்துவிடுகிறது. ஆனால் அதே மனிதன் இயங்கிக் கொண்டிருக்கும் போது உடலின் அங்க இணைப்புகளின் சம்பந்தம், தசைக்கட்டு, தசை நார்களின் இயக்கம் ஆகியவற்றை நன்கு புரிந்துகொள்ள முடிகிறது. இந்த புரிதலின் அடிப்படையில்தான் யதார்த்தத்தை மீறிய யதார்த்தங்களை நமது கலை முன்னோடிகள் சாதித்து இருக்கிறார்கள்.

ஆணின் வடிவமும், பெண்ணின் வடிவமும் கலந்து 'உமையொரு பாகன்' சிற்பத்தை உலோக வார்ப்படமாக வார்த்து எடுக்கிறபோது யதார்த்தத்தை மீறிய ஒரு புதிய யதார்த்தத்தை அவர்கள் சாதித்துக் காட்டி

இருக்கிறார்கள். இதைக்கண்டு அனுபவிக்க வேண்டுமானால் சென்னை அருங்காட்சியகத்திலுள்ள படிமக் கூடத்தில் நுழைந்தவுடன் காட்சி தரும் 'அர்த்த நாரீஸ்வரர்' சிற்பத்தைக் கண்டால் போதும். ஆணும், பெண்ணும் அந்த சிற்பத்தின் முகத்தில் அளவு குறையாமல் எந்த விகிதாசாரத்தில் அந்த சிற்பி கலந்து வெற்றிகண்டான் என்பதை அறிவியல் கூறமுடியாது. அது முழுக்க முழுக்க அந்த சிற்பிகளின் அழகியல் ஆளுமையின் வெளிப்பாடு. இதுவே தமிழ் அழகியல்.

ஓவியத்தமிழ் மரபு

ஓவியர்களைக் 'கண்ணுள் வினைஞர்' என்று பேசுகிறது மதுரைக் காஞ்சி. கண்ணால் பார்க்கப்படும் காட்சியைப் பிரதிபலிப்பவன் அல்ல ஓவியன். அந்த கண்ணின் உள்ளிருக்கும் மற்றொரு கண் மூலமாகக் காணும் காட்சியைப் பிரதிபலிப்பவனே ஓவியன். எனவேதான் அவன் 'கண்ணுள் வினைஞன்'. தனக்கு முன்னால் ஒரு ஆணை அல்லது பெண்ணை அசையாமல் உட்கார வைத்துவிட்டு ஓவியம் தீட்டுபவன் அல்ல பழந்தமிழ் ஓவியன். ஓவியம் தீட்டும் செய்தியைப் பேசுகிறபோது,


"உள்ளக் கிழியில் உருவெழுதி"

– என்று பேசுகிறது பழந்தமிழிலக்கியம். கண்முன்னால் காணும் காட்சியை ஓவியக் கித்தானில் தீட்டாமல், வெளிக்காட்சியை மனத்திரையில் ஓவியமாகத் தீட்டிக்கொண்டு அதன்பிறகு அதனை ஒரு புறக்காட்சியாகத் தீட்டும் செயல்பாட்டையே பழந்தமிழிலக்கியம் பேசுகிறது.



ஒலியின் அடிப்படையாகக் கொண்ட மொழி தோன்றுவதற்கு முன்னால், உடம்பின் மூலம் பேசும் மொழி, தோன்றியிருக்கிறது. இந்த உடம்பின் மொழியை மிகச் சிறந்த ஒரு வெளிப்பாட்டுக் கருவியாக வளர்த்துள்ளனர் நமது கலை மேதைகள் என்பதை தமிழகம் முழுவதும் காணக் கிடைக்கும் கலைப்படைப்புகள் சான்று சொல்கின்றன. மனித உடம்பின் மூலமாக மிக நுட்பமாகப் பேசும் தமிழர்களின் கலை வெளிப்பாட்டு மரபை நமது தற்கால ஓவியர்களும், சிற்பிகளும் எந்த அளவுக்குப் புரிந்து கொள்ளுவார்களோ அந்த அளவுக்கு அவர்களது படைப்பு சிறக்கும். தமிழகத்தின் தற்கால ஓவியம்/ சிற்பம் உலக அரங்கில் ஒரு உன்னதமான இடம் பெறும்.

• • •



*ஓவியம்* : ஆதிமூலம்